# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 5/2018**

பெயர்: கந்தாயி நாள்: 24.04.2023

பி.வா.சா.1. - வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பி.வா.சா.1. - கந்தாயி - சத்திய பிரமாண பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.03</u>

வழக்கு சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் எனது தகப்பனார் வாங்கிய சொத்துகளாகும். வழக்கு சொத்தும், இதர சொத்துக்களும் எனது தகப்பனாருக்கு பூர்வீக சொத்து என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும், வழக்கு சொத்துக்களும் இதர சொத்துக்களும் எனது தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றுதான் கூறியுள்ளேன். எனது தகப்பனார் சித்தனுக்கு கோனேரி, பெருமாள், பெரியண்ணன் என்று 3 மகன்கள் உள்ளார்கள். எனது தகப்பனார் சித்தன் சுமார் 48 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். எனது தாயார் சுமார் 37 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். வாக்கு சொத்துக்களை எனது சகோதரர்கள் கோனேரி, பெருமாள், பெரியண்ணன் ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தை எனது சகோதரர்கள்தான் அனுபவித்து வந்தார்கள் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக அவர்கள் அனுபவித்து வரவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. எனது சகோதரர் பெருமாளுக்கு தொழுநோய் பாதிப்பு இருந்தது. அவர் திருமணம் ஆகாதவர்.

2) நான் நல்லணம்பட்டியில் திருமணம் செய்து கொண்டுள்ளேன். எனது சகோதரர் பெருமாளுக்கு தொழுநோய் இருந்ததால், என்னுடைய சகோதரர் கோனேரிதான் அவரை கவனித்து வந்தார் என்று சொன்னால், சரியல்ல. எனது சகோதரர் கோனேரிதான் பெருமாளை கவனித்து வந்தார் என்றாலும், அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது தகப்பனார் வழக்கு சொத்து இதர சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்தவிட்டார் என்றால், சரியல்ல. பிரித்து கொடுத்துவிட்டுதான் இறந்தார். மேற்படி விபரத்தை எதிர் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், கூறியுள்ளேன். நான் எதிர் வழக்குரையில் அவ்வாறு கூறவில்லையென்றாலும், தற்போதுதான் அவ்வாறு கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

3) சர்வேயர் மூலமாக பிரித்துக்கொண்டார்களா என்றால், அண்ணன் தம்பி இருவருக்குள்ளாக பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு பிரித்துக்கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும். அவ்வாறு பிரித்துக்கொடுக்கவில்லை என்றாலும், பிரித்து கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. எனது திருமணத்திலிருந்து எனக்கும் எனது தகப்பனாருக்குமிடையே எந்த போக்குவரத்து இல்லையென்று சொன்னால், சரியல்ல. பெருமாள் இறந்து சுமார் 30 வருடங்கள் இருக்கும். பெருமாள் உயிருடன் இருக்கும்போது கோனேரிக்கு உயில் எழுதி வைத்தார் என்றால், சரியல்ல. பெருமாள் கோனேரிக்கு உயில் எழுதிய விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அதன் பின்னிட்டு கோனேரிப்பட்டி, வாதி சின்னராசு, 8ம் பிரதிவாதி ஆகியோர்கள் சேர்ந்து வழக்கு சொத்தை கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. அவர்கள் கூட்டாக அனுபவித்து வருவதில் அவர்களுக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால், சரியல்ல. அவர்களுக்கு இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றாலும், அதனால்தான் வாதி சின்னராசு சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அசல் வழக்கு 3/2012 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால், சரியல்ல.

4) அந்த வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால், எனக்கு தெரியாது. அவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் உள்ளார்கள். எனக்கும் வாதிக்கும், அவருடைய தகப்பனார் கோனேரிக்கும், 8ம் பிரதிவாதிக்கும் எந்த பேச்சுவார்த்தையும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. அவர்களுக்குள் பேச்சுவார்த்தை உள்ளது. அவர்களுக்குள் எந்த பேச்சுவார்த்தையும் கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அசல் வழக்கு எண் 3/2012ல் ஏற்பட்ட தீர்ப்பின்படி வழக்கு சொத்து வாதி சின்னராசுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. இதுநாள் வரை சின்னராசுதான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

5) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 ஆவணம் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்று சொன்னால், சரியல்ல. எனது உடன்பிறந்த சகோதரிகளின் பெயர் பெருமாயி மற்றும் மாரியம்மாள் ஆகும். இதில் பெருமாயி என்பவரை உள்ளூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள், மாரியம்மாளை புதூரில்

திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். மாரியம்மாளும் நானும் பேச்சுவார்த்தையில் இருந்தோம். எனது தகப்பனார் எங்களுடைய திருமணத்தை சீரும் சிறப்புமாக செய்து வைத்தார். பெருமாள், கோனேரிமீது உயில் எழுதி வைத்துள்ள உயில் ஆவணத்தை நகல் போட்டு பார்த்துள்ளேன். உயில் ஆவணத்தை பார்க்காமல் பொய்யானது என்று கூறுவது ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. பெருமாள் நல்ல மன நிலையிலும், நல்ல உடல் திடகார்த்தமாக இருந்தபோதுதான் உயிலை எழுதி வைத்தார் என்று சொன்னால், சரியல்ல. நான் எனது சகோதரர் பெருமாளை கடைசி காலத்தில் பார்த்திருந்தால், அந்த விபரங்கள் தெரிந்திருக்கும் என்றாலும், நான் பார்க்காததால்தான் அந்த விபரங்கள் தெரியவில்லை என்று சொன்னால், சரியல்ல. உயில் ஆவணத்தை ரத்து செய்ய நான் எந்த நடவடிக்கையாவது எடுத்தேனா என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. உண்மையில் உயில் ஆவணம் போலியானது என்றிருந்தால், உயில் ஆவணம் Probate செய்யப்பட்ட உத்தரவை எதிர்த்து மனு தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால், சரியல்ல.

6) வாதி மற்றும் அவரது தகப்பனார், 8ம் பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டாகத்தான் குடியிருந்து வருகிறார்கள் என்று கூறுவது பொய் என்றால், சரியல்ல. வாதிக்கு அசல் வழக்கு எண் 316/2008, 198/2006 மற்றும் 161/2004 ஆகிய வழக்குகளை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு எண் 3/2017 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடு ஏதேனும் செய்துள்ளேனா என்றால், நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் உள்ளோம். நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.30</u>

ஒப்பம் / கந்தாயி

ஒப்பம் / - ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.